[2nd August 1966

கையாளலாம் என்பதை ஆலோசிக்க வேண்டும். திருடுபவர்களையே சேர்த்து, அதாவது கலப்படம் செய்பவர்களையே சேர்த்துக் கொண்டு, கலப்படத்தைத் தடுப்பது எப்படி என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதென்றால், அந்தக் குழு எப்படிச் செயல்பட முடியும்? இந்தக் குழுவை மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் சபாநாயகர்: எல்லா வியாபாரிகளையுமே திருடர்கள் என்று 'ப்ரெஸ்யூம்' பண்ணிக் கொள்ளுவதா? The presumption is incorrect.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சட்டத்தை மீறிக் கலப்படம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கும் இருக்காது. எப்படியாவது எங்காவது தவறு ஏற்பட்டுவிட்டால், அதற்குச் சட்டம் இருக்கிறது. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பண்டங்கள் வாங்குபவர்களையும் அந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றால், there will be no end to it.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கலப்படத் தடுப்புச் சட்டப் பிரகாரம் தவறு இருக்கிறது என்று கண்டாலுங்கூட, உண்மையிலே பாதிக்கப்படுகிறவர்கள் குற்றமற்ற பல சிறிய வியாபாரிகள்தான் என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அவர்களுக்கு விமோசனம் கிட்டுவதற்காக இது போன்ற விசாரணை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எந்த எந்த இடங்களில் சிறு வியாபாரிகள் இந்தத் தண்டனைக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்தவுடன் அதற்குத் தக்கவாறு ஆலோசனை செய்து முடிவு எடுத்துக் கொள்ளுகிறோம்.

பஞ்சாயத்து யூனியன்கள்

* 39 **கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, பஞ்சாயத்து யூனியன்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை ஏதேனும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா?

(உ) அதில் கூறியுள்ள யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அமல் செய்யும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இக் குழு சர்க்காரால் அமைக்கப்படாததால் அதன் அறிக்கையின் நகல் ஒன்றை இச் சபைமுன் வைக்கும் கேள்வி எழ இடமில்லை.

2nd August 1966]

(உ.) குழுவின் சிபார்சுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கட்சிச் சார்பற்று நடைபெறுகின்ற நிலையில், ஒரு கட்சி தனது செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ளுவதற்கு, கட்சியின் நலன்களை வளர்த்துக் கொள்ளுவதற்கு இப்படி ஒரு பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்புவதை விட, சர்வ கட்சிகளையும் கொண்ட ஒரு குழு அமைத்து, பஞ்சாயத்து யூனியன்களுடைய நிர்வாகங்களைப் பரிசீலனை செய்து, அது சமர்ப்பிக்கும் யோசனைகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மூலக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, இது சர்க்காரால் அமைக்கப்பட்ட கமிட்டி அல்ல என்று நான் குறிப்பிட்டேன். எந்த விதமான அபிப்பிராயங்கள் சர்க்காருக்கு வந்தாலும், ஜனநாயக அடிப்படையில் இயங்குகிற சர்க்கார் அவற்றைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பஞ்சாயத்து நிர்வாகம் சீராக அமைய வேண்டும் என்பதிலே சிறந்த அக்கறை இருப்பதன் காரணமாகத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு குழு அமைத்து அத்தகைய காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறதா ? அந்த சிபாரிசுகளின் சிறந்த முக்கிய அம்சங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சிறந்த முக்கிய அம்சங்கள் எவை எவை என்று எனக்கு இப்பொழுது ஞாபகத்தில் இல்லை. பஞ்சாயத்து வருமானத்தைப் பெருக்குவது, பஞ்சாயத்து நிர்வாகத்தை எந்தவிதமாகச் சீர்திருத்தம் செய்வது, முனிசிபாலிட்டிக்குச் சர்க்கார் எவ்விதமாக அரை கிராண்ட் கொடுக்கிறார்களோ அம்மாதிரி டவுன் பஞ்சாயத்துக்கும் கொடுக்கலாமா, நிர்வாக விஸ்தரிப்பு அதிகாரிக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் இடையே இணக்கமான நிலையை ஏற்படுத்துவது எப்படி, ஜீப்களை யார் யார் எவ்வப்போது உபயோகிப்பது போன்று இப்படிப்பட்ட பல அம்சங்கள் இருக்கின்றன. விவரங்கள் எந்தப் பத்திரிகையில் வந்ததைக் கனம் அங்கத்தினர் பார்த்தாரோ அதைத்தான் நானும் பார்த்தேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, கனம் அமைச்சர் அவர்கள், "குழுவின் சிபார்சுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, அந்த தஸ்தாவேஜ் அரசாங்க தஸ்தாவேஜ்களில் ஒன்றாக ஆகிறது. அப்படியிருக்கும்போது. அதைச் சபைக்கு வைப்பதில் என்ன தவறு இருக்க முடியும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சிபாரிசுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். பரிசீலனை முடிவு பெற்ற பிறகு வேண்டுமானால், அதைச் சபையில் வைப்பதற்கு ஆட்சேபனை இல்லை. பரிசீலனை செய்து, சில சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளலாம்; பலவற்றைத் தள்ளிவிடலாம். அல்லது பலவற்றை ஏற்றுக் கொள்ளலாம்; சிலவற்றைத் தள்ளிவிடலாம். இப்பொழுது அதைச் சபையில் வைப்பதற்கில்லை.

திரு. நா. துரைப்பாண்டியன் : இந்தக் குழு ஜில்லா ஜில்லாவாக வந்தபோது, அந்தந்த ஜில்லாவில் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாக் கட்சியினரையும் கலந்து கொண்டார்கள் என்பது உண்மைதானே ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : அந்த விவரம் என்னிடம் இல்லை .

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அக்கறை எடுத்துக் கொண்ட மாதிரி எதிர்க் கட்சியினரும் அக்கறை எடுத்துக் கொண்டாலும் சர்க்கார் அதை ஆட்சேபிக்கப் போவதில்லையே? ஏன் எதிர்க் கட்சிக்காரர்கள் இதற்காக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்று அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எதிர்க் கட்சியினரும் ஆட்சேபம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. பாராட்டுதலை மறைமுகமாகவே அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டில் இயற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்கு தினத்திற்கு ஒரு திருத்தம், புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இதை விரிவாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும் வகையில், சர்வ கட்சியினரைக் கொண்ட, சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி உத்தேசம் இல்லை. ஏற்கனவே இது சம்பந்தமாக அவ்வப்போது சர்க்கார் இலாக்காவே என்ன என்ன திருத்தம், என்ன என்ன மாற்றம் செய்யவேண்டும் என்பதைக் குறித்த விஷயத்தைக் கவனித்து வருவதால், கனம் அங்கத்தினர் கூறுகிறபடி குழு அமைத்துப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

* 40 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களுக்கு, மான்யம் வழங்குவதற்கென அவை ஏ, பி, சி, டி, என்று பிரிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், இதை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?